**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – பள்ளிகள் – 1096 ஆதிதிராவிடர் நல பள்ளிகளில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க்குழாய் ஆகியவற்றினை பராமரிக்க நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது – கூடுதலாக 38 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந. 2) துறை**

அரசாணை (நிலை) எண்:85

நாள்.02.08.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050.
விகாரி வருடம், ஆடி மாதம் 17–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 98, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–2)துறை, நாள் 29.12.2014.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.க4/ 23581/2015, நாள் 21.05.2018.

******

**ஆணை :**

2014–15–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "1096 ஆதிதிராவிடர் நல பள்ளிகளில் உள்ள குழல் விளக்கு, மின்விசிறி மற்றும் தண்ணீர்க்குழாய் ஆகியவற்றினை பராமரிக்க ஒரு பள்ளிக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் ரூ.109.60 இலட்சத்தில் இச்செலவினம் மேற்கொள்ளப்படும்" எனும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் (2014–2015–ஆம் ஆண்டின்படி) 1096 ஆதிதிராவிடர் நல பள்ளிகளில் உள்ள குழல்விளக்கு, மின்விசிறி மற்றும் தண்ணீர் குழாய்களில் பழுது ஏற்பட்டு மாணவ, மாணவியர் பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டால், உடனடியாக மேற்படி சிறு பணிகளை மேற்கொள்ளவும், மேற்காணும் பொருட்களை பராமரிக்கவும் ஒரு பள்ளிக்கு தலா ரூ.10,000/– வீதம் இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் தேவைப்படும் மொத்த தொகை ரூ.109.60 இலட்சத்தினை தொடரும் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், (2017–2018) ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தற்போது மொத்தம் 1134 ஆரம்ப / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன எனவும், அரசாணை (நிலை) எண்.102, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–7)துறை, நாள்.09.12.2013 மற்றும்

(த.பி.பா.)

அரசாணை (நிலை) எண்.13, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–7)துறை, நாள்.21.01.2016 ஆகிய இரு அரசாணைகளின் வாயிலாக, உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வந்த 1 முதல் 5–ஆம் வகுப்புகள் தனியாக பிரிக்கப்பட்டு, புதிய ஆரம்பப் பள்ளிகளாக தற்போது செயல்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்து, மேற்காணும் 38 அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிகளுக்கு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஒரு பள்ளிக்கு தலா ரூ.10,000/– வீதம் 38 பள்ளிகளுக்கு ரூ.3,80,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, ஆதிதிராவிடர் நல பள்ளி மாணாக்கர்களின் கல்வி நலனை கருத்தில்கொண்டு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 1096 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் குறித்த காலப் பராமரிப்பு எனும் கணக்குத் தலைப்பில் ஏற்கனவே 109.60 இலட்சம் தொடரும் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் நிலையில், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வந்த 1 முதல் 5ஆம் வகுப்புகள் தனியாக பிரிக்கப்பட்டு தற்போது புதிய ஆரம்பப் பள்ளிகளாக செயல்பட்டு வரும் 38 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கும், ஒரு பள்ளிக்கு தலா ரூ.10,000/– வீதம் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரூ.3,80,000/–(ரூபாய் மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன்– 277 கல்வி– மாநிலச் செலவினங்கள்– AA பள்ளிக் கல்வி–318 பராமரிப்பு – 01 குறித்த கால பராமரிப்பு "

(IFHRMS DPC - 2225 01 277 AA 31801)
(Old DPC - 2225 01 277 AA 1811) "

5. மேலே பத்தி–3 இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஆதிதிராவிடர் நலப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பகிர்ந்தளிக்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கும் வகையில் இச்செலவினம் குறித்த கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேற்காணும் பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பளித்த தொகை மேற்கண்ட பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் எனவும், இத்திட்டத்தின் செலவினம் போக மீதத்தொகை இருப்பின், அத்தொகையை அரசுக் கணக்கில் உடனடியாக சரண் செய்யப்பட வேண்டும் என ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(த.பி.பா.)

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.31010/நிதித்(ஆதி(ம)பந)துறை/2019, நாள்.30.07.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை– 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காய்வு தலைவர், சென்னை–600 006/18/35.
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (ஆதி (ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை–600 009.
நிதித் (ஆதி (ம) பந) / (வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு–1/ஆதிந–5/ஆதிந–7) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
2.8.19